**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No.CC.No.35 of 2020**

**Prosecution Witness: PW6**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : அரவிந்த் | **Caste** | : |
| **Father's Name** | : தர்மலிங்கம் | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**(Accused present)**

**Dated.28.03.2023.**

**முதல் விசாரணை**

நான் எசனைக்கோரை புதுத்தெருவில் வசித்து வந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 28.12.2019 ம் தேதி அன்பிலுக்கு நானும், மதுரைவீரனும் சென்றபோது கொப்பாவளி ஒயின்ஷாப் அருகே கும்பலாக இருந்தது. போலிசார் நின்று கொண்டிருப்பதை பார்த்து நாங்கள் இருவரும் என்னவென்று பார்க்க சென்றோம், மூளை (எ) சுகுமார் என்பவரை போலிசார் பிடித்து வைத்திருந்தார்கள், எதிரியானவர் எங்கள் முன்னிலையில் மதியம் 2.15 மணியளவில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், மதுரைவீரன் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து **அ.சா.ஆ.2** ஆகும். 1–1/2 பவுன் எடையுள்ள சிலுவையுடன் கூடிய கருகமணி இரண்டு துண்டாக இருந்த தாலி செயினை எதிரியிடமிருந்து போலிசார் எடுத்தனர், மஞ்சள் நிறமுள்ள ஸ்கூட்டி TN 48 AM 1419 பதிவெண்

கொண்ட வாகனத்தை கைப்பற்றினார்கள். அப்போது மதியம் 3.15 மணி இருக்கும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், மதுரைவீரன் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான், அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.3** ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 எனது முன்னிலையில் கைப்பற்றியது தான். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனம் எனது முன்னிலையில் கைப்பற்றியது தான். அது சா.பொ.2 ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u> -

அ.சா.1 புளோரா எனக்கு தெரியாது. வழக்கின் எதிரியையும் எனக்கு தெரியாது. எதிரியை காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேன் என்றால் சரியல்ல, கொப்பாவளி ஒயின்ஷாப் அருகே வைத்து பார்த்தேன். அப்போது போலிசாரிடம் நான் என்ன விவரம் என்று கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. வழக்கு பற்றி நான் எந்த விவரமும் போலிசாரிடம் சொல்லவில்லை. எதிரியிடமிருந்து எதற்காக நகையை போலிசார் எடுத்தார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியாது. எதிரியிடமிருந்து கைப்பற்றிய சா.பொ.1 மற்றும் சா.பொ.2 யாருக்கு சொந்தமானது என்று எனக்கு தெரியாது. நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று நான் படித்து பார்க்கவில்லை. மதுரைவீரன் எனக்கு நண்பரா என்றால் இரண்டு பேரும் வண்டியில் ஒன்றாக சுத்துவோம். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் கேட்டு கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சி கையொப்பம் இட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.

/உண்மை நகல்/

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR

நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No.CC.No.35 of 2020**

**Prosecution Witness: PW7**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : இம்ரான் | **Caste** | : |
| **Father's Name** | : அலாவுதீன் | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**(Accused present)**

**Dated.28.03.2023.**

**முதல் விசாரணை**

நான் இலால்குடி, ஆசிரியர் காலனியில் வசித்து வந்து ராணேயில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் தற்போது ஞாபகமில்லை, காலை 11 மணியளவில் எனது வீட்டு அருகில் வைத்து செயின் காணாமல் போனது சம்பந்தமாக போலிசாரிடம் மேற்படி கையெழுத்தை போட்டு கொடுத்தேன், வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது, பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.4** ஆகும், போலிசார் என்னை விசாரித்தனர்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

குு.வி (அரசு தரப்பில்)

கடந்த 28.12.2019ம் தேதி காலை 11.30 மணியளவில் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அந்த பார்வை மகஜரில் நானும், நல்லேந்திரன் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது தனக்கே தெரிந்த காரணங்களுக்காக உண்மையை மறைத்து பொய்யா சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) –

போலிசாரிடம் வழக்கு சம்பந்தமாக நான் எந்த விவரமும் சொல்லவில்லை, நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

ஒப்பம்/-செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.

/உண்மை நகல்/

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR

நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No.35 of 2020**

**Prosecution Witness: PW8**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: நல்லேந்திரன்** | **Caste** | **:** |
| **Father's Name** | **: சிங்காரம்** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Religion** | **:** |
| **Taluk** | **:** | **Age** | **:** |

**(Accused present.)**

**Dated.28.03.2023.**

**முதல் விசாரணை**

நான் இலால்குடி, அகிலாண்டேஸ்வரி நகரில் வசித்து வந்து பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 28.12.2019 ம் தேதி காலை 11.30 மணியளவில் எனது வீட்டு அருகில் உள்ள புளோரா வீட்டில் நடந்த நகை காணாமல் போய்விட்டதாக கேள்விப்பட்டு அவரது வீட்டு வழியாக சென்று கொண்டிருந்த போது போலிசார் கேட்டு கொண்டதற்கிணங்க மேற்படி கையெழுத்தை போட்டு கொடுத்தேன். வழக்கு பற்றி எனக்கு வேறு எதுவும் தெரியாது. அந்த பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து **அ.சா.ஆ.5** ஆகும், போலிசார் என்னை விசாரித்தனர்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

குு.வி (அரசு தரப்பில்)

கடந்த 28.12.2019ம் தேதி காலை 11.30 மணியளவில் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அந்த பார்வை மகஜரில் நானும், இம்ரான் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது தனக்கே தெரிந்த காரணங்களுக்காக உண்மையை மறைத்து பொய்யா சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) –

போலிசாரிடம் வழக்கு சம்பந்தமாக நான் எந்த விவரமும் சொல்லவில்லை, நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

ஒப்பம்/-செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.

/உண்மை நகல்/

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR

நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.